# Tamil Murli Quiz 17-03-2015

தமிழ் முரளி வினாடி-வினா

முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.

இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

*Q.1)* **<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

**இந்த உலகம் தனது தமோபிரதான நிலையை அடைந்து விட்டுள்ளது. அதற்க்கான அடையாளங்கள் என்ன?**

A. நாளுக்கு நாள் துன்பங்கள் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன
B. பயங்கரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன
C. திருடர்கள் அடிதடியிலிறங்கி கொள்ளையடித்துச் செல்கிறார்கள்
D. பருவம் தவறி மழை பெய்து கொண்டே இருக்கிறது
E. மேலே கூறிய அனைத்தும்

*Q.2)* **<u>சரியா? தவறா?</u>**

**இராவண ராஜ்யத்தில் பக்தியே பக்தி ஆகிக் கொண்டே வந்துள்ளது. ஞானம் இருக்க முடியாது. பக்தியினால் ஒரு பொழுதும் சத்கதி ஏற்பட முடியாது. சத்கதி அளிக்கும் தந்தையை நினைவு செய்கிறார்கள். எனவே அவசியம் அவர் எப்பொழுதாவது வந்து சத்கதி அளிப்பார்.**

A. சரி
B. தவறு

*Q.3)* **<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

**இச்சமயத்தில் உலகத்தில் அநேக வழிகள், கொள்கைகள் உள்ளன. குழந்தைகளாகிய உங்களுடையதோ ஒரே ஒரு வழி ஆகும். அந்த ஒரே ஒரு வழி பகவானிடமிருந்து தான் கிடைக்கிறது. அவர்கள் பக்தி மார்க்கத்தில் செய்யும் ஜபம், தவம், தீர்த்தம் ஆகிய அனைத்தையும் எதனை அடைவதற்க்கான வழிகள் என்று நினைக்கிறார்கள்?**

A. முக்தியினை
B. சத்கதியினை
C. பகவானை
D. சாட்சாத்காரம்

*Q.4)* **<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

**பகவான் யார், எப்பொழுது வருவார். இதுவும் அறியாமல் உள்ளார்கள். மகிமை மட்டும் விதவிதமாகப் பாடுகிறார்கள். பகவான் பதித பாவனர் ஆவார், ஞானக் கடல் ஆவார் என்று கூறுகிறார்கள். __________ தான் சத்கதி ஏற்படுகிறது**

A. கடைசியில்
B. ஞானத்தினால்
C. பக்தியினால்
D. தூய்மையினால்

*Q.5)* **<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

**ஞானத்தின் மழையோ அனைவர் மீதும் பொழிய முடியாது என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். ஞானக் கடலான பகவான் வந்து விட்டுள்ளார் என்ற இந்த குரல் அவசியம் அனைவருடைய காதுகளுக்கும் போய்ச் சேர்ந்து விடும். ஆனால் எதனால் நிலையான அமைதி ஏற்படும்?**

A. ஞானத்தால்
B. யோகத்தால்
C. சுயநலமில்லா சேவையினால்
D. தாரணையினால்

*Q.6)* **சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

**"பிரம்மா தந்தைக்கு ________ என்று கூறப்படுகிறது" என்று பாபா கூறியுள்ளார்?**

A. ◯ அலௌகீக (ஹுமன்லி) சாகார தந்தை

B. ◉ அலௌகீக (வண்டர்ஃபுல்) அதிசயமான தந்தை

C. ◯ கிரேட் கிரேட் கிராண்ட் பாதர்

*Q.7)* **சரியான 2 (இரண்டு) விடைகளைத் தேர்ந்தெடுக்கவும்:**

**இராவணன் மீது வெற்றி அடைகிறோம். பின்னர் தோற்று போகிறோம். ஒரு தந்தையின் ஸ்ரீமத் படி நாம் உலகத்திற்கு அதிபதி ஆகி விடுகிறோம். எனவே அவருக்கு என்ன என்ன பெயர் கூறப்படுகிறது?**

A. ☑ உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான்

B. ☐ சத்குரு, சத்கதி தாதா

C. ☑ அனைவரின் துக்கத்தை நீக்கி சுகம் அளிப்பவர் (துக்க ஹர்த்தா, சுக கர்த்தா)

D. ☐ இறைவன் மோஸ்ட் லவ்லி மிகவும் அன்பானவர்

*Q.8)* **சரியான 2 (இரண்டு) விடைகளைத் தேர்ந்தெடுக்கவும்:**

**உங்களுக்கிடையே மிகுந்த அன்பு இருக்க வேண்டும். இல்லையென்றால் தந்தையின் மதிப்பு குறையுமாறு செய்கிறீர்கள். இறைவனின் குழந்தைகள் தங்களுக்குள் எப்படி உப்புத் தண்ணீர் போல இருக்க முடியும். பிறகு பதவி எப்படி அடைய முடியும்? தங்களுக்குள் பால் பாயசம் போல ஆகி இருங்கள் என்று தந்தை புரிய வைக்கிறார். உப்பு தண்ணீர் போல ஆனீர்கள் என்றால் ___________**

A. ☐ தேக அபிமானம் உள்ளது

B. ☐ சண்டை வரும்

C. ☑ நூறு மடங்கு தண்டனை பெறுவீர்கள்

D. ☑ எதுவுமே தாரணை ஆகாது

*Q.9)* **சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

**சிநேகம் மற்றும் பிராப்தியின் சம்பன்ன (முழுமையான) சொரூபம், (பாபாவிடம்) லயித்திருக்கும் சொரூபம் இருக்க வேண்டும். (அத்தாரிட்டி) _________ பேசும் பொழுது அதனுடைய பிரபாவம் (தாக்கம்) ஏற்படுகிறது.**

A. ◯ சக்தியின் ஆதாரத்தில்

B. ◯ அன்பின் ஆதாரத்தில்

C. ◉ அனுபவ ஆதாரத்தில்

D. ◯ தூய்மையின் ஆதாரத்தில்

*Q.10)* **சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

**பாபா இன்று நாடகத்தின் பொருட்டு என்ன கூறி எப்பொழுதும் கவலையற்று இருங்கள் என உரைத்துள்ளார்?**

A. ◯ அனாதி அவினாஷி

B. ◯ அமைந்த அமைக்கப்பட்ட நாடகம்

C. ◯ எந்த காட்சி கடந்து விட்டதோ அது மீண்டும் கல்பத்திற்கு பிறகு தான் (ரிபீட்) திரும்ப நடைபெறும்

D. ◉ மேலே கூறிய அனைத்தும்